O.S. No. : 62/2024

Dated: 17.04.2026

**வா.சா.1: குமார் ; த/பெ. காரி (இறப்பு)**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, அது எனது பாட்டனாருக்கு சொந்தமான சொத்தாகும். நான் எனது வழக்கில் தாவா சொத்து எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்று கூறியிருந்தால் அது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல, எனது பாட்டனார் சொத்து எனது தந்தைக்குதான் வந்து சேரும். எனது பாட்டனாரின் பெயர் என்ன என்றால் அல்லைய்யா கவுடர் ஆகும். அல்லைய்யா கவுடருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 வாரிசுகளாகும். அவர்களது பெயர் என்ன என்றால் அவர்களது பெயர் ரங்கன் மற்றும் காரி ஆகும்.

2. இந்த வழக்கில் தாவா சொத்து அல்லைய்யா கவுடருக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க எந்தவித ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்து அல்லைய்யா கவுடருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவருக்கு ரங்கன் மற்றும் காரி ஆகிய 2 வாரிசுகள் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் அது பற்றி எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

**(சாட்சி தனது வழக்கறிஞர் சாட்சியம் அளிக்கும்போது இருக்க வேண்டும் என்று கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.04.17 14:15:50 +0530